வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

## சூழலியல் திறனாய்வு நோக்கில் இயற்கைநெறிக்காலப் பனுவல்கள்

**முனைவர் ஞா.பெஸ்கி,**
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002

**ஆய்வுச்சுருக்கம்**

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்கைப் பேரழிவு மனித இனத்திற்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. மனித இனம் சந்தித்து வரும் அணுஆயுதப் போர், இயற்கை வளச் சுரண்டல், மக்கள் தொகைப் பெருக்கம், தொழில்நுட்பங்களின் வளர்ச்சி, சுற்றுச்சூழல் மாசுபாடு, உயிரினங்களின் அழிவு போன்ற சூழலியல் சிக்கல்களை இலக்கியம், பண்பாடு, இயற்கைச்சூழல் ஆகியவற்றின் ஊடாகக் கண்டறியும் அணுகுமுறையாக சூழலியல் திறனாய்வு தோற்றம் கண்டது. வேளாண்மையை அடியொற்றிய இயற்கைசார் வாழ்க்கைமுறையிலிருந்து நாகரிகத்தின் மோகத்தாலும் பொருளாதாரத் தேடலாலும் மனிதர்கள் தொழிற்சாலைகளைச் சார்ந்த வாழ்வியல்முறைக்கு மாறத் தொடங்கியதே சூழலியல் சீரழிவின் தொடக்கமாக அமைந்தது. வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் தூண்டுதலால் வாழ்வியல் சூழல் சூறையாடப்படுவதை உணர்ந்ததன் விளைவாக அதனைக் குறித்த ஆய்வியல்முறையாகத் தோற்றம் கண்டதே சூழலியல் திறனாய்வாகும். இத்தகைய சூழலியல் சிந்தனைகளைப் பண்டைத்தமிழ்ச்சமூகம் கையாண்டதைச் சங்கப்பனுவல்கள் எனப்படும் இயற்கைநெறிக்காலப் பனுவல்கள் வாயிலாக அடையாளம் காணமுடிகிறது. சூழலியல் திறனாய்வின் வளர்நிலைகள் தமிழிலக்கியப் பரப்போடு கொண்டுள்ள தொடர்பை அடையாளம் காண இக்கட்டுரை முற்படுகிறது. நிலம்சார் வாழ்வியல், சூழல் பற்றிய தன்னுணர்வு, இயற்கை வேளாண்மை, சூழல் பாதுகாப்பு, நீர்வள மேலாண்மை,

பேரிடர் மேலாண்மை ஆகிய நிலைகளில் சங்ககாலத் தமிழரிடையே நிலவிய சூழலியல் சிந்தனைகளைச் சங்கப்பனுவல்கள்வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

**திறவுசொற்கள்**

சூழலியல் திறனாய்வு, அழகியல் உணர்வு, உள்ளார்ந்த உணர்வு, சூழலமைவு, சூழலமைவு சிதைவு, பண்பாட்டுச் சூழலியல், இயற்கை வேளாண்மை, சூழல் பாதுகாப்பு, நீர்வள மேலாண்மை, பேரிடர் மேலாண்மை

**முன்னுரை**

இலக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பைக் குறித்த ஆய்வாக சூழலியல் திறனாய்வு அமைந்துள்ளது. சுற்றுச்சூழலைக் கையாளும் நெறிமுறைகளை மேம்படுத்தும் இலக்கினைக் கொண்ட சூழலியல்திறனாய்வு மனிதர்கள் இயற்கையோடு கொள்ளும் தொடர்பினை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டமைகிறது. இயற்கைநெறிக்காலம் என வரையறுக்கப்படுகின்ற சங்ககாலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்,பாலை ஆகிய ஐந்திணைசார் ஒழுக்கமே வாழ்வியல்முறையாகச் சித்திரிக்கப்பட்டதைச் சங்கஇலக்கியப் பனுவல்களின் ஊடாக அடையாளம் காணமுடிகிறது. மண்ணை வாழ்வியல்தளமாகவும் இனத்தின் அடையாளமாகவும் சித்திரிக்கின்ற சங்கப்பனுவல்களில் காணப்படுகின்ற சூழலியல் செல்நெறிகளைக் கண்டறிய இக்கட்டுரை முற்படுகிறது.

**சூழலியல் திறனாய்வு- விளக்கம்**

சுற்றுச்சூழல் மீதான மனிதர்களின் தாக்கத்தைக் கண்டறியும் அறிவியல் ஆய்வுகள் 1930களில் தொடங்கியபோதிலும் இலக்கியத் திறனாய்வாகச் சூழலியல் திறனாய்வு 1962க்குப் பிறகே உருவெடுக்கத் தொடங்கியது எனலாம். 1960களில் ஏற்பட்ட சுற்றுச்சூழல் இயக்கங்களின் எழுச்சியையும் 1962இல் ரேச்சல் கார்சன் வெளியிட்ட சைலண்ட் ஸ்பிரிங் என்னும் நூலையும் சூழலியல் திறனாய்வின் தோற்றுவாய்களாகக் கருதலாம்.விளைநிலங்களில் பயன்படுத்தப்பட்ட பூச்சிக்கொல்லிகள் சுற்றுச்சூழலுக்கு ஏற்படுத்திய பாதிப்புகளை எடுத்துரைப்பதாக இந்நூல் அமைந்தது.

சூழலியல் திறனாய்வு எனப்படும் Ecocriticism 1972இல் மீக்கர் என்பவரால் இலக்கியச் சூழலியல் என்னும் பெயரில் உருவாக்கப்பெற்றது. அதன்பின் வில்லியம் ரியுகெர்ட் என்பவரால் 1978இல் இலக்கிய இயக்கமாக முன்வைக்கப்பெற்றது.

**சூழலியல் திறனாய்வின் நான்கு அலைகள்**

சூழலியல் என்கிற கருத்துருவை வரையறுக்கும் அருண்நெடுஞ்செழியன், "சூழல்மண்டலங்களின் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களுக்கிடையேயான உறவைக்குறித்துப் பேசுகிற அறிவியல்தான் 'சூழலியல். சூழலியலானது இயற்கையின் கட்டமைப்பு இயக்கம் அதற்கிடையேயான உறவைக் குறித்து அறிவியல் நோக்கில் பகுப்பாய்கிறது"(அருண்நெடுஞ்செழியன், 2013: 19) என்று குறிப்பிட்டுள்ளார்.

சூழலியல் திறனாய்வின் வரலாறானது நான்கு அலைகளாகப் பாகுபாடு செய்யப்பெற்றுள்ளது.

சூழலியல் திறனாய்வின் முதல்அலையானது(1980- 1990) இயற்கையை வரலாற்றுக்கு மாறான முறையில் ஆராய்ந்தது. அரசியல் மற்றும் கருத்தியல் போக்குகளைக் கவனத்தில் கொள்ளாமல் காட்டுயிர் மற்றும் இயற்கையைக் குறித்து விதந்துரைப்பதாக மட்டும் இது அமைந்தது.

இரண்டாம் அலையானது (1991 – 2000) மனிதனை மையமிட்ட சூழலியல் ஆய்வுகளைக் கட்டுடைத்தல், வல்லாண்மை, சூழலியல் சீர்கேடுகள், விலங்குகள் மற்றும் தாவரங்கள் பற்றிய சார்புநிலை, சூழலியல் கருத்தியலாகப் பாலினம் மற்றும் வர்க்கத்தை அணுகுதல் போன்ற வழிகளில் இலக்கியப் பகுப்பாய்வை அணுகுவதற்கான புதிய பாதையை வழங்கியது.

மூன்றாம் அலையானது (2001 -2007) புவிவெப்பமடைதல் போன்ற சுற்றுச்சூழல் சிக்கல்களுக்கு எதிராக வாதிட்டது.

நான்காம் அலையானது (2008 முதல் இன்றுவரை) மனித உடல்மீதான சூழலியல்நீதியை வலியுறுத்தும் சூழல்பெண்ணியம் சார்ந்ததாக அமைகிறது.

இலக்கிய இயக்கமாகப் பிற்காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட சூழலியல் திறனாய்வின் கூறுகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தொல்காப்பியம், சங்க இலக்கியம் உள்ளிட்டவற்றின் பனுவல்கள் வரை அடையாளம் காணமுடிவது தமிழின் தனிச்சிறப்பாகும். எனவே இயற்கையை நோக்கும் அழகியல் உணர்வு(Aesthetic sensitivity), உள்ளார்ந்த உணர்வு( Spiritual sensitivity) ஆகிய உணர்வுநிலைகளைப் பண்டை இலக்கியப் பரப்பு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

**இயற்கைநெறிக்காலச் சமூகம்**

மனித வாழ்வு தொடக்கக் காலத்திலிருந்தே சுற்றுச்சூழலின் இன்றியமையாமையை உணர்ந்துள்ளதை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைப் பதிவுசெய்துள்ள சங்க இலக்கியப் பனுவல்கள் சங்ககாலச் சமூகத்தை இயற்கைநெறிக் காலச்சமூகமாக அடையாளப்படுத்துகின்றன.

“தமிழிலக்கிய வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு காலங்களைச் சங்ககாலம் முதலாக வகுத்தல்போல, தமிழ்மக்கள் சிந்தனையை ஆதாரமாகக் கொண்டு காலத்தை வகுப்போமாயின், சங்ககாலம் என வழங்குங் காலப்பிரிவை இயற்கைநெறிக் காலம் எனக் கூறலாம். இயற்கைநெறிக் காலம் என்றும் குறிக்கும்போது தமிழ்மக்களுடைய வாழ்க்கை தமிழ்நாட்டுச் சூழலுக்கு ஏற்ப அமைந்ததென்றும் பிற நாட்டினர் செல்வாக்குத் தமிழ்மக்கள் வாழ்க்கையிற் சிறப்பிடம் பெறவில்லையென்றும் உலகியல் வாழ்க்கையிற் பூரணநம்பிக்கை தமிழ் மக்களிடையே நிலவியதென்றும் கூறலாம்” (ஆ.வேலுப்பிள்ளை,1985: 10) என்னும் விளக்கம் இயற்கைநெறிக்காலம் என்பதற்கான வரையறையாக அமைகிறது.

சங்க அகஇலக்கியப் பனுவல்கள் அனைத்தும் இயற்கைப்பின்னணியிலே எழுதப்பட்டுள்ளன.

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்**

**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" (தொல்.பொருள் :5)**

என்று தொல்காப்பியர் முன்வைக்கும் அகத்திணைக் கோட்பாட்டின் அடிப்படையிலே சங்க அகஇலக்கியங்கள் பாடப்பெற்றுள்ளன. தம் இயல்பில் மாற்றமின்றி அமைந்துள்ள முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று பூக்களின் பெயரால் தொல்காப்பியர் சுட்டும் நிலப்பாகுபாடு தமிழ்மரபு முன்வைக்கும் நான்கு வகையான சூழலமைவு (Eco systems) ஆகும். "சூழல் அமைவு என்பது உயிருள்ள (Biotic) மற்றும் உயிரற்ற (Abiotic) காரணிகளின் தொகுப்பு. தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள் போன்றவை உயிருள்ள காரணிகள். பாறைகள், வெப்பம், ஈரம் போன்றவை உயிரற்ற காரணிகள்.சூழல் அமைவில் இவை ஒன்றுக்கொன்று நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்பில் உள்ளன" (நக்கீரன், 2022 : 30)என்று சூழலமைவை விளக்கியுரைக்கிறார் நக்கீரன்.

தட்பவெப்ப மாறுபாட்டின் காரணமாகத் திரிபடைந்த நிலமே பாலையாதலால் அதனைத் தனியொரு நிலமாகத் தொல்காப்பியர் சுட்டவில்லை என்பது புலனாகிறது. இதனைக் கு.வி.கிருஷ்ணமூர்த்தி, "தற்காலச் சூழல் அறிவியல் சிந்தனைகளுள் ஒன்று சூழலமைவின் சிதைவு (Ecosystem degradation) என்பதாகும். திணைகள் பல்வேறு காரணிகளால் சிதைவடையும் அல்லது அழியும் என்பது இதன்பொருள். இதைப் பழந்தமிழர்கள் அறிந்திருந்தனர். ஆகவே அதை ஒரு புதிய பெயரால் குறித்தார்கள். அதுவே பாலை" ( கு.வி.கிருட்டிணமூர்த்தி, 2011:35)என்று சுட்டியுள்ளார்.

தொல்காப்பியர் சுட்டும் முதற்பொருள்களுள் மற்றொன்று பொழுது என்பதாகும். பெரும்பொழுது ஆண்டின் பிரிவாகவும் சிறுபொழுது என்பது நாளின் பிரிவாகவும் அமைகிறது. புவியைச் சுழலும் நிலவின் இயக்கமே திங்களாகவும் தன் அச்சில் சுழலும் புவியின் இயக்கமே நாளாகவும் அமைவது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனினும் தொல்காப்பியர் பெரும்பொழுதை இளவேனிற்காலம், முதுவேனிற்காலம், கார்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், கூதிர்காலம் என்று தட்பவெப்பத்தின் அடிப்படையில் வகைப்பாடு செய்துள்ளது தொல்காப்பியரின் சூழலியல் சிந்தனையாக அமைந்துள்ளது.

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப" (தொல்.பொருள்: 12)

என்னும் நூற்பாவில் நேரடியாக அவர் எடுத்துரைக்கும் உணா, மா,மரம், புள் ஆகியவையும் பிற என்னும் வகைப்பாடுகளுள் அடங்கியுள்ள ஊர், நீர் ஆகியவையும் சூழல்தொகுப்பை அடையாளப்படுத்தும் பதிவுகளாக அறியப்படுகின்றன. ஏனைய கருப்பொருள்களும் உரிப்பொருள்களும் பண்பாட்டுச் சூழலியலின் (Cultural Ecology) புலப்பாடு எனில் மிகையில்லை. இலக்கணம் சுட்டும் புறத்திணைகளும் பூக்களின் பெயரிலே அமைந்துள்ளது தமிழ்ச்சமூகத்திற்கும் இயற்கைக்கும் இடையிலான உறவின் வெளிப்பாடே எனலாம்

**சூழல் பற்றிய பழந்தமிழர் தன்னுணர்வு**

இவ்வுலகம் இயற்பொருள்களான நிலம், நெருப்பு, நீர், காற்று, ஆகாயம் என்பனவற்றின் சேர்க்கை என்பதை,

**"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**

**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" (தொல்.பொருள்: 635)**

என்று தொல்காப்பியர் சுட்டுவது சூழல் குறித்த பண்டைத்தமிழரின் புரிதலை உணர்த்துகிறது.

"மண்டிணிந்த நிலனும்

நிலனேந்திய விசும்பும்

விசும்பு தைவரு வளியும்

வளித்தலைஇய தீயும்

தீமுரணிய நீரு மென்றாங்

கைம்பெரும் பூதத் தியற்கை போலப் ..." (புறநானூறு: 2)

என்னும் அடிகளில் சூழல் தொகுப்பின் இயல்பை முரஞ்சியூர் முடிநாகனார் எடுத்தியம்புகிறார்.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்ட சங்கத்தமிழரிடையே இயற்கையை தங்கள் உடன்பிறப்பாகக் கருதும் உயரிய பாங்கு விளங்கியதை,

“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது, நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே” (நற்றிணை: 172)

என்னும் பாடல் மெய்ப்பிக்கிறது. அதாவது தான் நீர்ஊற்றிப் பேணிவளர்த்த புன்னையைத் தன் உடன்பிறப்பாகக் கருதும் தலைவியின் மனவுணர்வு இப்பாடலில் சித்திரிக்கப்பெற்றுள்ளது.

**இயற்கை வேளாண்மை**

பயிர்களின் ஊடாக வளர்ந்து பயிர்களின் வளர்ச்சியைப் பாதிக்கும் களைகளை அகற்றிய முறை சங்க இலக்கியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. குறுந்தொகையின் 100, 392 ஆம் பாடல்கள், அகநானூற்றின் 184ஆம் பாடல் ஆகியன வேளாண்குடிகள் தங்கள் கைகளைப் பயன்படுத்திக் களைபறித்ததைப் பதிவுசெய்துள்ளன. மேலும் வயல்வெளிகளின் அருகே மரங்கள் வளர்க்கப்பட்டிருந்ததைக் “குறுந்தொகை 8, ஐங்குறுநூறு.70, அகநானூறு.236, 367, நற்றிணை 350, அகம்.367 ஆகிய பாடல்கள் உறுதிசெய்கின்றன. கால்நடைகள் வெளிப்படுத்தும் கழிவையும் மற்றும் செடிகொடிகளில் காய்ந்து உதிர்ந்த சருகுகளையும் இயற்கை உரங்களாகப் பயன்படுத்திய பாங்கிற்குச் சான்றாகப் பின்வரும் பாடலைச் சுட்டலாம்.

“முல்லை தாய கல்லதர்ச் சிறுநெறி
அ்யாது இருந்த அங்குடிச் சீறுர்த்
தாதெரு மறுகின் ஆபுறந் தீண்டும்” (நற்றிணை :343)

இவ்வாறே கலித்தொகை.108, புறநானூறு 215, 311, பதிற்றுப்பத்து.13 ஆகிய பாடல்களும் பெரும்பாணாற்றுப்படையின் 154 ஆம் அடியும் இயற்கை உரங்களின் பயன்பாட்டைப் புலப்படுத்துகின்றன. இவ்வாறு பெறப்பட்ட கால்நடைக்கழிவுகள் வேளாண்மையில் பயன்படுத்தப்பட்டதால் வெவ்வேறு நிலப்பகுதிகள்

செழுமையடைந்தன என்றும் அப்பகுதிகள் மூதூர், முற்றம், பாசறை என்று வெவ்வேறு பெயர்களால் சுட்டப்பட்டன என்பதையும் பின்வரும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

“தாதுஎரு மறுகின் மூதூர்” (அகநானூறு:165

“தாது எருத் தநைந்த முற்றம்” (மலைபடுகடாம்:531)

“தாதொரு மறுகிற் பாசறை பொழிய” (புறநானூறு:33)

கார்காலத்தில் தங்கள் ஆடுகளை மழைப்பொழிவிலிருந்து காக்க முனைந்த இடையர்கள் அவற்றை விரைந்து ஓட்டிச்செல்லும் காட்சியினைச் சங்கஇலக்கிய அடிகள் பதிவு செய்துள்ளன.

“வான் இகுபு சொரிந்த வயங்கு பெயற்கடை நாள்

பறிப்புறத்து இட்டபால் நொடை இடையன்

சிறுதலைத் தொழுதி ஏமார்த்த அல்கும் புறவினதுவே” (நற்றிணை:142)

தொழு உரத்தின் பயன்பாடு சங்க இலக்கியத்தில் இருந்தமையை உறுதி செய்வது போன்று பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

“காடு உறை இடையன் யாடுதலைப் பெயர்க்கும்

மடிவிடு வீளை வெரிஇ குறுமுயல்

மன்ற...........” (அகநானூறு:394)

என்னும் பகுதி இடையர்கள் கிடைகட்டுதல் வாயிலாக மேற்கொண்ட இயற்கை வேளாண்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. பயன்படுத்த இயலாத காட்டுமரங்களை எரித்துப் பெறப்பட்ட சாம்பல் உரமாகப் பயன்படுத்தப்பட்டதை குறுந்தொகையின் 198, 291 ஆகிய பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**சூழல்காப்புச் சிந்தனை**

பண்டைத்தமிழர் இயற்கையைத் தாம் வாழ்வின் அங்கமாகவும் வாழ்வைத் தீர்மானிக்கும் அடித்தளமாகவும் கருதினர். தம் வாழ்விற்கு மட்டுமன்றித் தாம் வாழும் புவியின் கட்டமைப்புக்கும் நீர் இன்றியமையாதது என்பதை உணர்ந்த பண்டைத்தமிழரின் அறிவுத்திறத்தை,

“நீர் இன்று அமையா உலகம் போலத்

தம்இன்று அமையா நம்நயத் தருளி” (நற்றிணை:5)

என்னும் தலைவியின் கூற்று மெய்ப்பிக்கிறது. இதனையே திருவள்ளுவர்,

“நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்

வானின் றமையா தொழுக்கு” (குறள்:20)

என்று எடுத்தியம்புகிறார். அவ்வாறே கடல்நீர் ஆவியாகி மேகமாகி மழையாகப் பொழிகிறது என்னும் அறிவியல் கருத்தைத் திருவள்ளுவர்,

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி

தான்நல்கா தாகி விடின் (குறள்:17)

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துரைத்துள்ளது திருவள்ளுவரின் சூழலியல் சிந்தனைக்குச் சான்று பகர்கின்றது.

ஞாழல் அம் சினைத் தாழ்இணர் கொழுதி

முறி திமிர்ந்து உதிர்த்த கையள்

அறிவு அஞர் உறுவி ஆய் மட நிலையே (நற்றிணை: 106)

என்னும் அடிகளில் ஞாழல்மரத்தின் பூக்களை உதிர்த்து சினத்தை வெளிப்படுத்திய தலைவியை அறிவு மயங்கியவள் எனத் தலைவன் கூறுவதன் வாயிலாக இயற்கையைப் பேணும் உள்ளத்தை உணரமுடிகிறது.

**நீர்வள மேலாண்மை**

“வெள்ளத் தனைய மலர்நீட்டம், ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான், அகழ்வாரைத் தாங்கும் நிலம், ‘நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும், மருந்தாகித் தப்பா மரத்தாற்றல் செல்வம், பயன் மரம் உள்ளூர் பழுத்தற்றால், மோப்பக் குழையும் அனிச்சம் போன்ற திருக்குறளின் பகுதிகள் திருவள்ளுவரின் சூழலியல் சிந்தனையைப் பறைசாற்றுகின்றன. நீரின் இன்றியமையாமையை உணர்ந்த வள்ளுவர் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்திற்கு அடுத்தநிலையில் வான்சிறப்பு அதிகாரத்தை இடம்பெறச் செய்துள்ளார். பண்டைத்தமிழர் தங்களின் நீராதாரமாக விளங்கும் ஆற்றினைக் குறித்துக் கொள்ளும் பெருமிதவுணர்வைப் பட்டினப்பாலையின்

“வான்பொய்ப்பினும் தான் பொய்யா

மலைத் தலைய கடல் காவிரி” (பட்டினப்பாலை: 5-6)

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன.

குண்டுகட் பாலியாதன், சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதனை வாழ்த்துகின்றபொழுது இரைச்சலுடன் பாய்ந்துவரும் பொருநையாற்றின் விளைச்சலை ஒப்பிட்டு வாழ்த்தியுள்ளார்.

“கல்லென் பொருநை மணலினு மாங்கட்
பல்லூர் சுற்றிய கழனி
எல்லாம் விளையுநெல்லினும் பலவே” (புறநானூறு:387)

வெப்பத்தின் கொடுமையைத் தவிர்க்க நீர்நிலைகள் இன்றியமையாதவை என்பதை “‘தீமுரணிய நீரும்‘ (புறநானூறு-2) என்ற புறநானூற்று அடி மெய்ப்பிக்கிறது.

“நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண்தட் டோரே
தள்ளாதோர் இவண்தள்ளா தோரே (புறநானூறு:18:27-29)

என்னும் அடிகள், பகைவரை வென்று சிறைபடுத்துவதைவிட, மழையால் பெருகும் நீரை ஏரிகளிலும் குளங்களிலும் சிறைப்படுத்துவதையே நாட்டிற்குத் தேவை என்கிறார். மடு, குளம், குட்டம், கேணி போன்ற வெவ்வேறு நீர்நிலைகளின் பெயர்களைச் சங்க இலக்கியப் பனுவலின்ஊடாக அறியமுடிகிறது.

**சூழல் மாசுபாடு சித்திரிப்பு**

"ஆலையும் வேலையும் மக்களுக்காகத் தான். ஆனால் மக்களின் வாழ்வை மரணத்தை நோக்கிக் கொண்டு சென்றால் ஆலையும் வேலையும் யாருக்குப் பயன்தரும்" ( ஜே.பால்பாஸ்கர், 2022 :148) என்னும் வினா சூழல் மாசுபாட்டின் காரணத்தையும் விளைவையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

பாரியின் பறம்புமலையைச் சித்திரிக்கும் கபிலர்,

"குறத்தி மாட்டிய வறல்கடைக் கொள்ளி

ஆரம் ஆதலின் அம்புகை அயலது

சாரல் வேங்கை பூஞ்சினைத் தவழும்" (புறநானூறு: 108)

என்னும் அடிகளில் சந்தனமரம் நெருப்புக்கு இரையாதலையும் அதனால் எழுந்த புகை வேங்கைமரத்தின்மீது படிந்ததையும் சுட்டுவது சூழல் மாசுபாட்டின் சித்திரிப்புக்குச் சான்றாக அமைகிறது.

"கார்க் கரும்பின் கமழ் ஆலைத்

தீத்தெறுவின் கவின்வாடி

நீர்ச் செறுவின் நீள் நெய்தல" (பட்டினப்பாலை :9-11)

என்னும் பாடலடிகள் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சும் ஆலைகளிலிருந்து வெளிப்பட்ட புகையினால் ஏற்பட்ட மாசுபாட்டைத் தவிர்ப்பதற்கு அங்கிருந்த தென்னை, வாழை, பாக்கு, பனை போன்ற மரங்கள் துணைசெய்ததை எடுத்துரைக்கின்றன. பகைமன்னரின் நாட்டின்மீது போர்தொடுக்கும்போது அந்நாட்டு நீர்நிலைகளை யானைகளைக் கொண்டு சிதைப்பது பண்டைக்காலப் போர்முறைகளுள் ஒன்றாக அமைந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியப் பகுதிகள் உறுதிசெய்கின்றன.

**பேரிடர் மேலாண்மை**

இயற்கைச்சீற்றங்கள் நிகழ்கின்ற காலங்களில் அந்தந்த நிலங்களில் வாழும் மக்கள் தங்களைக் காத்துக்கொள்ள முற்படுவர். எனினும் வருமுன் காத்தல் என்னும் நிலையில் கடல்சீற்றங்களிலிருந்து தங்களைக் காத்துக்கொண்ட பண்டைத்தமிழரின் பேரிடர் மேலாண்மைச்சிந்தனைகளை,

“தாழை மணந்து ஞாழலொடு கெழீஇ
படப்பை நின்ற முடந்தாள் புன்னை” (அகநானூறு:180)

என்னும் பகுதி எண்பிக்கின்றது. கடற்கரைப்பகுதிகளில் கடல்அரிப்பைத் தடுப்பதற்குக் கடற்கரைச் சோலைகள் எங்ஙனம் தேவைப்படுகின்றன என்பதைக்

“கடலும் கானலும் போல

புல்லிய சொல்லும் பொருளும்”(பரிபாடல்:15.11-12)

என்னும் அடிகள் உறுதிசெய்கின்றன. சொல்லும் பொருளும் பிரிக்கமுடியாத இயல்பைப் பெற்றிருப்பதுபோல் கடலும் கடற்கரைச்சோலைகளும் பிரிக்க முடியாத இயல்பைக் கொண்டிருக்கவேண்டும்” என்று வலியுறுத்துகின்றன.

மேலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மண்ணின் இயல்பு திரிந்து நெகிழ்வடைவதால் ஏற்படும் நிலச்சரிவும் இயற்கைச் சீற்றங்களுள் ஒன்றாகும். இதனால் ஏற்படும் பாதிப்பிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள மரங்கள் வளர்த்த மேன்மையைக் கீழ்க்கண்ட அடிகள் உறுதிசெய்கின்றன.

“வளிபொரு மின்னொடு வான்இருள் பரப்பி

விளிவு இன்று கிளையோடு மேல்மலை முற்றி

தளிபொழில் சாரல் ததர் மலர் தாஅய்

ஒளிதிகழ் உத்தி உருகெழு நாகம்

அகரு, வாழை,ஞெமை,ஆரம் இனைய

தகரமும்,ஞாழலும், தாரமும்,தாங்கி

நனிகடல் முன்னியது போலும்,தீம்நீர்

வளிவரல் வையை வரவு” (பரிபாடல்:12)

இவ்வாறு அமைந்திருந்த கடற்கரைச்சோலைகளைச் கண்டல்வேலிகள் என்றும் தாக்குகின்ற ஆழிப்பேரலையை உயர்திரை நெடுநீர், பெருநீர்வேலி, வரம்பு இல் வெள்ளம் என்றும் சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன.

**தொகுப்புரை**

சுற்றுச்சூழல் மீதான மனிதர்களின் தாக்குதலைக் குறித்த அறிவியல் ஆய்வுகள் 1930களில் தொடங்கியபோதிலும் இலக்கியத் திறனாய்வாகச் சூழலியல் திறனாய்வு 1962க்குப் பிறகே உருவெடுக்கத் தொடங்கியது. இயற்கையைப் பேணுதல் குறித்த சிந்தனைகளை ஆய்வுநோக்கில் வளர்த்தெடுத்த இதன் கூறுகளை இயற்கையோடு இயைந்த வாழ்க்கைமுறையைச் சித்திரிக்கும் சங்ககாலப் பனுவல்களில் கண்டறியமுடிகிறது. ஐந்திணைசார் இயற்கைவாழ்வியல், சூழல் குறித்த தன்னுணர்வு நிலை ஆகியன பண்டைத்தமிழர்களின் அறிவுவளர்ச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் சான்று பகர்கின்றன. இயற்கை வேளாண்மையைப் பின்பற்றுதல், நீர் ஆதாரங்களைப் பேணுதல், சூழல் பாதுகாப்பின் இன்றியமையாமையை உணர்தல், பேரிடர்களை எதிர்கொள்ளுதல் ஆகிய நிலைகளில் சூழலியல் சிந்தனைகளைத் தம் வாழ்வில் கடைபிடித்த நாகரிகச் சமூகமாகச் சங்ககாலம் என அறியப்படுகின்ற இயற்கைநெறிக்காலச் சமூகம் அமைந்திருந்தது என்பது மிகையில்லை.

துணைநின்ற நூல்கள்

1.அருண் நெடுஞ்செழியன்(2013), மார்க்சிய சூழலியல், பூவுலகின் நண்பர்கள் வெளியீடு, சென்னை

2.கிருட்டிணமூர்த்தி,கு.வி.(2017), தமிழரும் தாவரமும், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

3.பால் பாஸ்கர்.ஜே(2022). தமிழக சுற்றுச்சூழல் நேற்று இன்று நாளை, பரிசல் புத்தகநிலையம், சென்னை

4.நக்கீரன்(2022), தமிழ் ஒரு சூழலியல் மொழி, காடோடி பதிப்பகம், நன்னிலம்

5.வேலுப்பிள்ளை.ஆ(1985), தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரி புத்தகப்பண்ணை, சென்னை